**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC No. 20 of 2024** |
| Deposition of witness | : | **PW-7** |
| Name | : | பாலமுருகன் |
| Father Name | : | முத்துராமன் |
| Age | : | **37** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19.08.2025.

முதல் விசாரணை

1. நான் தற்போது மூலனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.02.2024 தேதியில் ஊத்துக்குளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, ரஞ்சித் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று தலைமை காவலர் ரமேஷ் என்பவர் ஊத்துக்குளி காவல் நிலைய குற்ற எண் 64 of 2024 இதசவின் படி சட்ட பிரிவுகள் 454, 457, 380 இன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. பின்பு வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே திருப்பூர் ஒரு விரல் கைரேகை பிரிவுக்கு போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு இரவு 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று

சாட்சிகள் குலோத்துங்கன் மற்றும் கார்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். ( மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).

3. ஒருவிரல் கைரேகை பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் ஆன சுப்பிரமணி மற்றும் சார்பு ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர் அங்கு வந்து கைரேகைகளை சேகரித்தார்கள். பின்பு அந்த வீட்டில் வசித்த ரஞ்சித் குமார் அவரது மனைவி தாமரைச்செல்வி மகள்கள் ரஞ்சினி மற்றும் ரணிகா ஆகியோரது கைரேகைகளையும் எடுத்துச் சென்றார்கள். பின்பு ஒன்று முதல் ஐந்து வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்கிறேன்.

4. அவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்த போது ரஞ்சித் தனது வீட்டில் களவுப் போன நகைகளுடன் வெள்ளை நிற பட்டன் டைப் லாவா போன் திருடு போனதாகவும் கூறி அதன் பில்லையும் ஆஜர் செய்தார். அதன் பின்பு ஒருவிரல் கைரேகை பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எடுத்துச் சென்ற மாதிரி கை ரேகைகளுன் S1 ரேகையானது புகார்தாரர் ரஞ்சித்தின் கைரேகை உடன் ஒத்து போனதாகவும், மீதம் இருந்த இரண்டு கைரேகைகள் வீட்டில் இருந்த இன்மேட்டுடன் ஒத்துப்போகாமல் தனித்து இருந்ததாகவும், அதனை NAFIS செயலி மூலம் ஒப்பீடு செய்து பார்த்தபோது அந்த கைரேகைகள் திருப்பூர் மாநகர வடக்கு காவல் நிலைய

குற்ற எண் 1373 of 2023 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான செந்தில்குமார் மகன் கார்த்தி என்பவருடைய வலது ஆள்காட்டி விரல் மற்றும் இடது நடுவிரல் ஆகிய ரேகைகளில் கூறுடன் ஒத்து போனதாகவும் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் எதிரியை உறுதி செய்து அவரை தேடி வந்தேன்.

5. 05.03.2024 தேதியில் மேற்படி எதிரி கார்த்தி திருப்பூர் MS நகர் கருப்பராயன் கோவில் அருகே இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் சாட்சிகள் குமார் மற்றும் கதிரேசன் ஆகியோரை உடன் அழைத்துக் கொண்டு எனது போலீஸ் பார்ட்டியுடன் அந்த இடம் சென்று பகல் 11.00 மணிக்கு பார்த்தபோது எதிரி கார்த்தியுடன் மற்றொரு நபராக எதிரி புவனேஸ்வரனும் இருந்தார். அவர்களை பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார்கள். அது தொடர்ச்சியாக விசாரணையின் போது எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் குமார் மற்றும் கதிரேசன் முன்னிலையில் தனித்தனியாக எடுத்துச் செல்லப்பட்ட மடிக்கணினியில் தட்டச்சு செய்து பதிவு செய்தேன்.

6. பின்பு எதிரி கார்த்தி அவர் பயன்படுத்தி வந்த இந்த வழக்கில் திருட்டு போன வெள்ளை நிற லாவா பட்டன் டைப் செல்போனை, தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை, எதிரி கார்த்தியின் பெயரில் பெறப்பட்ட சிம்புவுடன் சேர்த்து அன்றைய தினம் மதியம் 12.45

மணி அளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். (மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .

7. மேலும் புவனேஸ்வரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதின்படி ஏற்கனவே தன்னுடைய பங்கில் ஒரு பவுன் செயினை கோயம்புத்தூரில் அடையாளம் தெரியாத ஒரு நபருக்கு ரூபாய் 30 ஆயிரத்திற்கு விற்று, அதில் ரூபாய் 20,000/- தனது தாயாரிடம் கொடுத்து வைத்ததாக கூறியதன் அடிப்படையில், திருப்பூர் நெருப்பெரிச்சல், தோட்டத்து பாளையம், வெள்ளாளர் தெரு, அஞ்சாவது வீதியில் உள்ள, சாவித்திரி காம்பவுண்ட் என்ற முகவரியில் இருக்கும் எதிரி புவனேஸ்வரன் வீட்டிற்கு முன்பு வைத்து அவரது தாயார் நாகஜோதி ஆஜர் செய்த ரூபாய் 20,000/- அதே சாட்சிகள் முன்னிலையில் மதியம் 02.15 மணி அளவில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். (மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

8. எதிரி புவனேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் புகார்தாரரின் வீட்டில் திருடிய நகைகளுள் தனது பங்கினை திருப்பூர் தோட்டத்து பாளையத்தில் உள்ள அபிராமி பைனான்சியல் தனது தாயாரின் பெயரில் அடகு வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில், அங்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் ஒரு கிராம் எடை கொண்ட ஒரு ஓம் டாலர் மற்றும் ஒரு கிராம் எடை கொண்ட ஒரு ஜோடி

தோடையும் அன்றைய தினமே மாலை 04.15 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன் (மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது) .

9. சென்று மேற்படி அபிராமி பைனான்ஸில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை சாட்சி உதயக்குமார் என்பவருடன் சென்று ஆய்வு செய்தபோது அடகு ரசீதில் இருந்த தேதியான 13.02.2024 உரிய பதிவுகளை ஆய்வு செய்தபோது, புவனேஸ்வரன் மற்றும் அவரது தாயார் நாகஜோதி கடைக்கு வந்து அடகு வைத்த பதிவை குறுந்தகடில் காப்பி செய்து அதன் புகைப்பட நகலையும் பெற்றேன். (மேற்படி குறுந்தகடு **அ.சா.ஆ.12 ஆகவும்,** புகைப்பட நகல் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

10. அதன் பின்பு எதிரி கார்த்திகேயன் கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற லாவா பட்டன் டைப் செல்போன் IMEI நம்பருக்கு CDR பெற்று ஆய்வு செய்ததில், திருடு போவதற்கு முன்பு கடைசியாக 11.02.2024 ஆம் தேதி 9942993265 என்ற சாட்சி ரஞ்சித் குமார் பெயரில் இருக்கும் ஏர்டெல் சிம் இருந்ததாகவும் அதன் பின்பு 15.02.2024 தேதியில் 9944391354 என்ற எண்ணுள்ள எதிரி கார்த்தியின் பெயரில் உள்ள ஏர்டெல் நம்பர் ஆனதும் அதே IMEI நம்பரில் பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. (அதற்கான **SDR** சான்று **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

11. அதன் பின்பு 6 முதல் 13 வரையிலான பட்டியல் சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்து 06.03.2024 தேதியில் எனது புலன்

விசாரண முடித்து எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 457, 380 r/w 34 IPC இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார்தாரர் நகைகளை வாங்கியதற்கான ரசீதும் எனது விசாரணையின் போது சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நகைகளை ஒரு டப்பாவில் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்ததாக சாட்சிகள் கூறும் நிலையில் அவ்வாறு எந்த ஒருடப்பாவும் இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரில் செல்போன் காணாமல் போனதாக சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் போலீஸ் விசாரணை வாக்குமூலத்தில் அதைப் பற்றி கூறி அதன் ரசீதையும் ஆஜர் செய்தார்.

2. புகார்தாரரின் வீட்டு அருகே சுமார் 15 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். வழக்கின் புகாரிலோ விசாரணை வாக்குமூலத்திலோ பீரோ உடைக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வீட்டின் கதவு உடைக்கப்பட்டதாக சொல்லும் நிலையில் அதன் பாகங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் பூட்டு கதவுடன் இணைக்கப்பட்ட பூட்டு என்பதால் கைப்பற்ற இயலவில்லை. அவ்வாறு இருப்பின் அந்த பூட்டின் புகைப்படம் எதுவும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். புகாரிலோ விசாரணை வாக்கு மூலத்திலோ வீட்டில் இரண்டு பீரோக்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது இரண்டு பீரோக்கள் இருந்தது.

3. மாதிரி வரைபடத்திலும், பார்வை மகஜரிலும் சாட்சி குலோத்துங்கனின் வீடு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகளிடம் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்துதான் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நகைகள் அடகு கடையில் வைத்து கைப்பற்றதாக சொல்லும் நிலையில் அதற்கான கைப்பற்றுதல் கேமரா பதிவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அந்த நகைகள் அடகு கடையில் கைப்பற்றப்படாத காரணத்தினால் தான் அதன் பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. புகார்தாரரும் சாட்சி குமாரும் நண்பர்கள் என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் குமார் மற்றும் கதிரேசனை விசாரித்த போது அந்த இடத்தில் பொதுமக்கள் வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், சொல்லும் விதத்தில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் ஒன்றாம் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

(இரண்டாம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.08.19 15:15:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.